Registered as a Newspaper

ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -10

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி -24 11-10-2003 சனிக்கிழமை ஓசை 235

அமல்
பல், மூக்குக்கண்ணாடியகம்
கண்பரிசோதித்து தகுந்த பார்வைக்கு ஏற்ற கண்ணாடி வழங்குதல், பல்கட்டுதல், பல்கிளீப் பொடுதல் போன்றன உடன் செய்து கொடுக்கப்படும் தொடர்புக்கு.
பரந்தன்வீதி
புதுக்குடியிருப்பு.
(3712)

## -தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளில் -

# பேரணிகள், கூட்டங்கள், கலைநிகழ்ச்சிகள்;

# தமிழர் தாயகமெங்கும் எழுச்சி நிகழ்வுகள்!

### பெரும் எண்ணிக்கையில் மக்கள் பங்கேற்பு

**இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் 16ஆம் ஆண்டு நினைவு நாளும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வும் நேற்று தமிழர் தாயகப் பகுதியில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது. மாவட்ட ரீதியாக நடைபெற்ற எழுச்சி நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள், மாணவர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஊழியர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.**

முன்னதாக அனைத்துப் பிரதேசங்களிலும் பெண்களின் அடிமைத்தனத்திற்கு எதிராக சித்தரிக்கப்பட்ட காட்சிகளைக் கொண்ட ஊர்திகள் களமுனையில் வீரச்சாவடைந்த முதல் பெண் போராளி 2ஆம் லெப் மாலதியின் உருவப்படங்களைத்தாங்கிய பேரணிகளுடன் ஆரம்பமான எழுச்சி நிகழ்வுகள் பிரதான நிகழ்வு நடைபெற்ற இடங் களைச்சென்றடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடி ஏற்றப்பட்டு பொதுச்சுடர், ஈகச்சுடர் ஏற்றல்2ஆம் லெப். மாலதியின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்தல் என்பன போராளிகளாலும் மக்களாலும் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து சிறப்புரைகள்தமிழர் தாயகப்பகுதிகளில் சிறப்புற நடைபெற்றன.

கிளிநொச்சியில் டிப்போச் சந்தியில் இருந்து பாண்ட் வாத்திய அணிநடை முன்னே நகர 2ம்.லெப். மாலதியின் திருவுருவப்படம் தாங்கியபேரணி கிளி. பொது விளையாட்டு மைதானத்தைச் சென்றடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் கற்சிலைமடு அ.த.க.

(10ஆம் பக்கம் பார்க்க)

### ஊரடங்கு நீடிப்பு

(கொழும்பு)

கிண்ணியாவில் மீண்டும் நேற்று பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுலப்படுத்தப்பட்டுள்ளது. தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## பலகல்லவின் பதவிக்காலம் மேலும் ஓராண்டு நீடிப்பு!

### தேர்தல் ஆணையாளர் மீண்டும் நியமனம்

(கொழும்பு)

சிறிலங்காவின் இராணுவத் தலைமைத்தளபதி லயனல் பலகல்லவின் பதவிக் காலம் சிறிலங்கா சனாதிபதியால் நீடிக்கப்பட்டுள்ளது அத்துடன் அவர் சனாதிபதியால் பதவியுயர்வும் பெற்றுள்ளார்.

2004ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை லயனல் பலகல்லவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.மேலும் கூட்டுப்படைத் தலைமையகத்தின் பிரதான தளகர்த்தராகவும் இவர் நியமனம் பெற்

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் குழுவினர் டென்மார்க்,நோர்வே செல்வர்

அயர்லாந்தில் சட்ட வல்லுநர்களுடனான சந்திப்பை நிறைவு செய்துள்ளதமிழீழஅரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப்புலிகளின் குழுவினர் டென்மார்க் மற்றும் நோர்வேஅரசுகளின் அழைப்பை ஏற்று அந்நாடுகளுக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

டென்மார்க் செல்லவிருக்கும் இவர்கள் அங்கு மூன்று நாட்கள் தங்கியிருப்பர்.இதன் பின்னர் நோர்வே பயணமாகும்புலிகளின் குழுவினர் அங்கே நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரை சந்தித்துப் பேசியுள்ள

(10ஆம் பக்கம் பார்க்க)

### -2ஆம் லெப். மாலதி வீரச்சாவடைந்த-

## கோப்பாய் நகர்ப் பகுதியிலும் அஞ்சலி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் களமுனையில் உயிர் துறந்த முதல் பெண் போராளியான 2ம் லெப் மாலதி உயிர்நீத்த கோப்பாய் தரவைப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஞாபகார்த்த தூபிப் பகுதியிலும் நேற்று அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.

கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இவ் அஞ்சலி நிகழ்வில் ஆசிரியர் வே. சண்முகலிங்கம் நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கினார்.

பொதுச்சுடரை வலிகாமம் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி. சி. வசந்தி ஏற்ற ஈகைச்சுடரை மாவீரர் சிவகுமாரின் சகோதரியான திருமதி. யோகமலர் புண்ணியமூர்த்தி ஏற்றிவைத்தார்.

நினைவுத்தூபிக்கான மலர் மாலையை அணிவித்து மாலதி

(10ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச அனுபவங்களைப் பகிர்ந்தமை பெரும் பயனுள்ளதாக இருந்தது!

### டப்ளினின் கலந்துரையாடல்கள் குறித்து தமிழ்ச்செல்வன்

(லண்டன்)

அயர்லாந்து சந்திப்பில் சர்வதேச அளவில் இன பிணக்குகள், போர்கள் நடந்த தேசங்களிலே இடைக்கால ஏற்பாடாக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகள் சம்பந்தமாக பல கருத்துக்களை நாங்கள் உள்வாங்கக் கூடியதாக இருந்தது. சர்வதேச அளவில் அவர்கள் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட பொழுது எங்களுடைய அந்த வரைவை உருவாக்குவதற்கும் எங்களுக்கு மிக மிக பயனுள்ளதாக இருந்தது-இவ்வாறு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

அயர்லாந்து சந்திப்பின் பின்னர் நேற்று பி.பி.சி.க்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அயர்லாந்திலே எங்களுடைய தமிழ்ச்சட்ட வல்லுனர்களுடன் கூடி இடைக்கால நிர்வாக வரைவு

(10ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணிலுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

### பொ.ஐ.முன்னணி தீர்மானம்

(கொழும்பு)

சிறிலங்காப் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாத பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டுவர தமது கட்சி தீர்மானம் மேற்கொண்டிருப்பதாக பொதுசன ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது. பொதுசன ஐக்கிய முன்னணியின் ஊடக மாநாடு நேற்று கொழும்பில் இடம் பெற்றது. இதில் உரையாற்றிய நாடாளுமன்றஉறுப்பினர் சரத் அமுனுகம, பிரதம மந்திரி ஐக்கிய நாடுகளின் சபையில், ஈராக் விடயத்தில் அமெரிக்கா சார்பாகப் பேசியமை இலங்கையில் வெளிநாட்டுக் கொள்கைக்கு பாரிய கேட்டை விளைவித்து விட்டதாகக் கூறினார். இந்த மாநாட்டில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச அரசாங்கம் தொழிலாளர்களை

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்- முஸ்லிம் ஒற்றுமையை சீர்குலைக்க தீயசக்திகள் முனைகின்றன!

### கிண்ணியா சம்பவம் குறித்து புலிகள் அறிக்கை

(திருமலை)

திருமலை கிண்ணியா பிரதேசத்தில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையே ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்ட அரசியல் துறையினர்ஒற்றுமையைப்பேணுவோம் என்ற தலைப்பில் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

தமிழ் முஸ்லிம் மக்கள் சகோதரத்துவமாக வாழ்ந்தவர்கள், புரிந்துணர்வுடன் செயற்பட்டவர்கள்

இன்று புரிந்துணர்வை சீர்குலைக்க இருசமூகத்தவரிடையே குழப்பங்களை ஏற்படுத்த சில தீய சக்திகள் முனைகின்றன. முன்னர் மூதூரில் குழப்பங்களை ஏற்படுத்த முனைந்த இச் சக்திகள் இன்று கிண்ணியா பகுதிகளிலும் இன முரண்பாட்டை ஏற்படுத்த முனைகின்றன.

முரண்பாடுகளை நீக்கி புரிந்துணர்வை வளர்க்க நாம் அண்மையில் கிண்ணியாபகுதியைச் சேர்ந்த முஸ்லிம் பிரதிநிதிகளை சந்தித்தோம். இதனை விரும்பாத சில அரசியல்வாதிகள் தங்கள் சுய அரசியல் இலாபத்திற்காக இரு சமூகங்களுக்கும் இடையில் குழப்பங்களை ஏற்படுத்த முனைகின்றனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

### - சனாதிபதி வாசஸ்தலம் -

## உயர்பாதுகாப்பு வலயத்தில் குண்டு வெடிப்பு; ஒருவர் பலி!

கொழும்பு ரோஸ்மீட் பிளேஸ் என்ற இடத்தில் குண்டு வெடிப்புச் சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளது. அதியுயர் பாதுகாப்பு வலயமான இங்கு சனாதிபதியின் வாசஸ்தலமும் அமைந்துள்ளது. கோமஸ்வர இரத்தினக்கல் வர்த்தக ஒருவரின் வீட்டின் பின்அறையில் தங்கியிருந்த ஒருவர் இந்தச் சம்பவத்தில் பலியானார். இவர் வைத்திருந்த கைக்குண்டே வெடித்திருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர். இந்தக் கைக்குண்டு படையில் இருந்து தப்பியோடிய விமானப்படைவீரர் ஒருவரால் இங்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

## 10ல.பேரை கொழும்பிற்கு அழைத்து அரசாங்கத்தைக்கவிழ்த்துவிடுவோம்

### எச்சரிக்கிறார் அநுரா

(கொழும்பு)

பொ.ஐ.முன்னணி எதிர்வரும் 24,25ஆம் திகதிகளில் 10 லட்சம் பேரைக் கொழும்பிற்கு அழைத்து வந்து தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்த்து விடுவோமென அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் காலி மாவட்ட இளைஞர் அணியின் உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். ஐ.தே.கட்சிக்கு எதிரான அனைத்து அரசியல் கட்சிகளும் அரசாங்கத்தைப் பதவி கவிழ்ப்பதற்காக கரம் கோர்த்து இருக்கின்றன. அத்துடன் ஜனதா விமுக்தி பெரமுனவுடன் ஏற்படுத்தும் கூட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியை

(10ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (மட்டுப்படுத்தப்பட்டது)

# பணிநிலை வேண்டுகை

கீழ்க்காணும் பதவிக்குத் தகுதியானோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வயதெல்லை:-** 18 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்டவர்கள்

**பதவி :-** பொதுமுகாமையாளர்

**குறியீட்டு இலக்கம்:-** 101/10

**சம்பள அளவுத்திட்டம்:-** 4750 - 6850 / 100X10-110x10

## தகைமைகள்:-

I. கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 12 ஆவது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 06 வருட அனுபவம்.

அல்லது,

II. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்), க.பொ.த. (உயர்தரம்) இல் மூன்று பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக.:.தொழில் நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரிக்கப்பட்டு 15-10-2003ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக தலைவர், வவுனியா பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஹொரவப்பொத்தான வீதி, வவுனியா என்னும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரிலோ அனுப்பி வைக்கவும்.**

**தலைவர்,**
**வவுனியா பனை, தென்னைவள**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
**ஹொரவப்பொத்தான வீதி,**
**வவுனியா.**

(கி-8291)

### அக்கராயன் பிரதேசத்திலுள்ள

# முன்பள்ளி மற்றும் பாடசாலைகளில் ஊட்டச்சத்து மா விநியோகம்!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அக்கராயன் பிரதேசத்திலுள்ள முன்பள்ளிகள் மற்றும் அரச பாடசாலைகளுக்கும் 01.10.2003 முதல் ஊட்டச்சத்து நிரம்பிய போசாக்கு மா வழங்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சுஜந்தன் மற்றும் சுகாதாரத் திணைக்கள பணியாளர்களின் ஆலோசனைகளுடன் தயாரிக்கப்பெற்று சுகாதார வைத்திய அதிகாரியின் சிபார்சின் பிரகாரம் வழங்கப்பட்டு வருகின்றது. மேற்படி செயற்பாட்டிற்கு கியூடெக் நிறுவன கிளி/முல்லை மாவட்ட உதவி இயக்குனர் அருட்திரு. றோய் பேடினற் அடிகள், கியூடெக் நிறுவன யாழ்/கிளி/முல்லை மாவட்டங்களின் இயக்குனர் அருட்திரு கிறிஸ்தோபர் ஜெயக்குமார் அடிகள் பூரண ஒத்தாசையினை வழங்கி வருகின்றனர்.

மேற்படி செயற்பாட்டுத் திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் அனைத்து மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளதென கிளி/முல்லை மாவட்ட கியூடெக் நிறுவன இணைப்பாளர் இ.கணேசபிள்ளை கிளி.அரச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற கல்விக் குழுக்கூட்டத்தில் தெரிவித்தார். (சோ)

# கடன்களுக்கான வட்டிவீதம் தமிழீழ வைப்பகத்தில் குறைப்பு!

(அலுவலக செய்தியாளர்)

கடன்களுக்கான வட்டி வீதம் தமிழீழ வைப்பகத்தில் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இது குறித்து கிளிநொச்சி தமிழீழ வைப்பக மேலாளர் மா. சுதர்சன் அவர்களுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்,

தமிழீழ வைப்பக வாடிக்கையாளர்களின் நன்மையினை கருத்திற்கொண்டும் அவர்களின் தொழில்முயற்சியினை ஊக்குவிக்கும் முகமாகவும், கடந்த 01.10.2003 ஆம் திகதி முதல் எமது வைப்பக வாடிக்கையாளர்களுக்கு கடன்களுக்கான வட்டி வீதம் குறைககப்பட்டுள்ளதெனவும்,அத்துடன் கதிரொளி திட்டக்கடன் (சோளர்), அடகுக்கடன், மேலதிகப்பற்றுகளுக் கான வட்டிவீதம் ஆகியன குறைக்கப்பட்டுள்ளதுடன்,

மற்றும் சிறுவர்களுக்கான "அமுதம்" திட்ட கணக்கிற்கான பரிசில்கள் தொடர்ச்சியாக வழங்குவதற்கான நடவடிக்கையினையும் தமிழீழ வைப்பகம் மேற்கொண்டுள்ளதெனத் தெரிவித்தார். (சோ)

# செட்டிகுளம் பகுதியில் சிப்பாய் தற்கொலை!

(செட்டிகுளம் நிருபர்)

வவுனியா செட்டிகுளம் பகுதியில் உள்ள கஜசிங்கபுர இராணுவ முகாமில் வியாழக்கிழமை அதிகாலை இராணுவ சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்துள்ளார் என்று வவுனியா செட்டிகுள பொலிசார் தெரிவிக்கின்றனர். (21)

# வெடிபொருளுடன் விளையாடிய சிறுவன் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

படையினரால் கைவிடப்பட்ட வெடிபொருள் ஒன்றை எடுத்து விளையாட முற்பட்ட சிறுவன் ஒருவன் அது வெடித்ததில் படுகாயமடைந்துள்ளான்.

நேற்று முன்தினம் கைதடிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த நிசாந்தன் (வயது-14) என்பவரே படுகாயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (33)

# சேமிப்புத் திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தல்

(மல்லாவி)

கிராமிய அபிவிருத்தி வங்கியால் பாண்டியன்குளம் பிரதேச பாலைப்பாணி கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு சிறுவர் பாடசாலையில் அக்கிராம மக்கள் அனைவரையும் இணைத்து நிலையான வைப்புமுறை, சிறு சேமிப்புத்திட்டம், தளிர் சேமிப்புத் திட்டம், முதலீட்டு சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் பற்றிய நடைமுறைகள், பெற்ற கடன்களை உரிய தவணையில் செலுத்துவதற்கான வழிமுறைகளைப் பற்றி விளக்கத்தை கிராமிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பாண்டியன்குளம் பிரதேச இணைப்பாளர் ஆகியோர் அளித்தனர்.

ஒவ்வொரு மாதமும் 08ஆம் திகதி இத்தகைய வைப்பு முறைகள் யாவும் உரிய கிராமத்தில் மேற்கொள்ளப்படும் எனப் பிரதேச இணைப்பாளர் அமலன் தெரிவித்துள்ளார். (24)

# நாற்று வெளிவந்தது!

தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனத்தின் வெளியீடான நாற்று சஞ்சிகை இதழ் 22 வெளிவந்துள்ளது.

இவ்விதழ் "பெண்கள் படையணியின் முதல் வித்து" "நீ தானே" "இறைவா அதையும் எனக்கே படைத்துவிடு" "நம்பிக்கை" ஆகிய கவிதைகளையும் ("பாலியல்) தவறுகள் - தண்டனைகள்," "கெட்ட போரிடும் உலகத்தை வேருடன் அழிப் போம்," "மாறிக்கொண்டிருக்கும் உலகமும் மாற்றம் அடைய வேண்டிய மனங்களும்," "மீள் எழுப்பும் கட்டடங்களும் சிதைவுறும் சமூக விழுமியங்களும்" ஆகிய கட்டுரைகளும் "பலி" சிறுகதை வழமையான "பாக்கியம் மாமியும் பரமேஸ்வரியும் பவித்திராவும்," "பெண்களும் சட்டமும்," "உண்மைச் சம்பவங்கள்" "கிரண் பேடி" வாழ்க்கைத் தொடர்... ஆகிய ஆக்கங்கள் தாங்கி இவ்விதழ் வெளிவந்துள்ளது.

# பயங்கரவாதத்தை முறியடிப்பதில் உலக நாடுகள் காட்டும் விருப்பு வெறுப்புக் குறித்து வாஜ்பாய் எச்சரிக்கை

(புதுடில்லி)

**உலக நாடுகள் பயங்கரவாதத்தை முறியடிப்பதில் விருப்பு, வெறுப்புக் காட்டப்படுவதன் அபாயம் குறித்து இந்தியப் பிரதமர் வாஜ்பாய் உலகை எச்சரித்துள்ளார்.**

நேற்று முன்தினம் பாங்கொக்கில் தன்னைச் சிறப்பித்த தாய்லாந்துப் பிரதமர் விருந்தளிக்கும் போது உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் பயங்கரவாதத்தால் பாதுகாப்பிற்கு ஏற்படும் அச்சுறுத்தலை எல்லா நாடுகளும் எதிர்கொள்ள வேண்டியுள்ளதால் அதனை முறியடிப்பதற்கு உலகளாவிய ஒத்துழைப்புத் தேவையென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதன் முக்கியத்துவத்தை இந்தியா தனது கசப்பான அனுபவத்தின் மூலம் அறிந்து கொண்டதென அவர் கூறியுள்ளார்.

பயங்கரவாதத்தின் அபாயம் குறித்துச் சனநாயக சமுதாயங்களை எச்சரித்திருக்கும் பிரதமமந்திரி ஆசியாக்கண்டத்திலிருந்து திட்டமிட்ட குற்றங்களை முழுமையாக ஒழிக்க வேண்டுமெனக் கூறியுள்ளார்.

இந்தியாவும்,தாய்லாந்தும் இரு நாடுகளுக்கிடையே பொருளாதாரம்,உயிரியல் தொழில்நுட்பம்,அறிவியல் தொழில்நுட்பம்,வேளாண்மை சுற்றுலா ஆகிய துறைகளில் ஒத்துழைப்பது என்ற உடன்பாட்டில் கையெழுத்திட்டுள்ளன. தாய்லாந்துப் பிரதமரும், இந்தியப் பிரதமரும் பேச்சுவார்த்தை நடத்திய போது எந்தவொரு பயங்கரவாதக் குழுவும் இந்தியா எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காகத் தாய்லாந்தை பயன்படுத்த அனுமதிக்கமாட்டோம் எனத் தாய்லாந்துப் பிரதமமந்திரி கூறியுள்ளார்.

தாய்லாந்து நாடாளுமன்றத்தில உரையாற்றும் முதலாவது வெளிநாட்டுப் பிரமுகர் என்ற பெருமையை வாஜ்பாய் பெற்றுள்ளார்.





**சிட்னியில் அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன்கவாட்டின் வீட்டிற்கு முன்னால் அரசு தொழிலாளரின் உரிமைகளைக் குறைக்க எடுக்கும் முயற்சிக்கெதிராகவும் தொழிலாளருக்குத் தொழில் பாதுகாப்பு வழங்குமாறும் கோரி கட்டடத் தொழிலாளர் மேற்கொண்டுள்ள ஊர்வலம்.**

# பாராளுமன்ற கீழ்ச் சபை ஐப்பானில் கலைப்பு

(ரோக்கியோ)

ஜப்பானியப் பிரதமர் யூனிசிரோ கொய்சுமி தனது பாராளுமன்றத்தின் கீழ் சபையை நேற்றுக் கலைத்துள்ளார்.

நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்கு வழிவகுக்கும் நோக்குடன் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரதமரின் சீர்திருத்தத் திட்டங்களுக்கு மக்கள் ஆணை கிடைக்குமா? என்பதைச் சோதிக்கும் பரீட்சையாகத் தேர்தல் களம் அமையவுள்ளது. இவர் 2001 ஆம் ஆண்டு ஆட்சிபீடம் ஏறியமை குறிப்பிடத்தக்கது. அப்போது அவரது சீர்திருத்தக்கொள்கைகளுக்குத் தீவிர ஆதரவு கிடைத்தது. அந்நாட்டின் பொருளாதாரம் மறுமலர்ச்சி அடைந்து வரும் வேளையில் கீழ்ச் சபையின் பெரும்பான்மைப் பலத்தைத் தக்கவைத்துக் கொள்வதே பிரதமரின் ஆளும் கட்சித் தலைமையிலான கூட்டணியின் நோக்கமாகக் காணப்படுகிறது.



**உலகில் மிகச் சிறிய புத்தகம் ஒன்றை ரஷ்யர் ஒருவர் வெளியிட்டு வைக்கிறார்.**

# தி.மு.கழக அழகிரி உள்ளிட்ட 13 பேருக்கு குற்றப்பத்திரிகை கையளிப்பு

(சென்னை)

தி.மு.க. முன்னாள் அமைச்சர் த.கிருட்டிணன் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள மு.க அழகிரி உட்பட 13 பேருக்கு நேற்று மதுரை நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை நகல் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பிணையில் வெளிவந்துள்ள அழகிரி உள்ளிட்ட 13 பேரும் மதுரை ஆறாவது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகியுள்ளார்கள்.

குற்றம் சாட்டப்பட்ட 13 பேருக்கும் 356 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகை நகல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.


# பலஸ்தீன ஆயுதப்படை-இஸ்ரேலியப்படை காஸா பள்ளத்தாக்கில் மோதல்

(டெல் அவிவ்)

காஸா பள்ளத்தாக்கிலுள்ள றவா அகதிமுகாமிற்கு அருகே இஸ்ரேலியப் படையினரும்பலஸ்தீன ஆயுதப்படையினரும் சண்டையிட்டு வருகின்றனர்.

ஹெலிகொப்டர்களின் உதவியோடு இஸ்ரேலிய கவச வாகனங்கள் முகாமின் எல்லைப்புறங்களை முற்றுகையிட்ட போது இச்சண்டை நடைபெற்றுள்ளது. சண்டையில் 21 வயதான பலஸ்தீன இளைஞன் ஒருவர் உயிரிழந்ததுடன் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

எகிப்திய எல்லைக்கு அருகேயுள்ள இம்முகாம் கடத்தல்காரர்களின் தலைமை இடமாக விளங்குகிறது என்பதே இஸ்ரேலின் குற்றச்சாட்டாகும்.



**சட்ட விரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட சி.டி.களை ரோஜரால் நசித்து அழிக்கப் படுகின்றது.**

# பேருந்து-பாரஊர்தி நேருக்குநேர் மோதின இந்தோனேசியாவில் 54 பேர் உடல்கருகிப் பலி

இந்நோனேசியாவில் பேருந்தும், பாரஊர்தியும் நேருக்கு நேர்மோதித், தீப் பிடித்துக்கொண்டுள்ளது.



இதில் பாடசாலைக் குழந்தைகள் உட்பட 54 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் இந்தோனேசியாவின் பாலி நகரிலிருந்து பாடசாலை குழந்தைகளை ஏற்றிக்கொண்டு ஜோக் ஜாக்கடா எனுமிடத்தை நோக்கிச சென்று கொண்டிருந்த பேருந்து, தெற்கு ஜாவாப் பகுதியில் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த பாரவூர்தி பேருந்துடனும் மற்றொரு மினிவானுடனும் மோதியது.

ஒன்றுடன் ஒன்று மோதிய வேகததில் பேருந்து தீப்பிடித்து எல்லா இடமும் தீ பரவியதால் அதிலிருந்த 52 பாடசாலைக் குழந்தைகள் உட்பட 54 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளார்கள்.

தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மீட்புப் படையினர் காயமடைந்தவர்களை மீட்டுள்ளனர்.

# தென் கொரிய சனாதிபதி மக்களிடம் மன்னிப்புக் கோரினார்

(சியோல்)

தென்கொரிய சனாதிபதி தனது அரசாங்கத்தின்புகழை பாதித்திருக்கும் ஊழல் விவகாரங்கள் தொடர்பாக பொது மக்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

அடுத்தவருடம் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் மீண்டும் பொதுமக்களின் ஆதரவைப் பெறப்போவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் பதவியேற்றுள்ள சனாதிபதி 08 மாத ஆட்சிகாலத்தில் தனது சகாக்களின் ஊழல் விவகாரங்கள் தொடர்பாக கடும் அவஸ்தைப்பட நேர்ந்துள்ளது, கடைசியாக எஸ்.கே.என்ற நிறுவனத்தின் ஊடாக அவரது மற்றுமோர் சகா பணம் பெற்றுள்ளதாக வழக்குப் பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஈராக் புனரமைப்பில் அடுத்த 4 வருட காலத்திற்கு 5600 கோடி டொலர் தேவையென உலகவங்கி அறிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக்கை புனரமைப்பதற்கு பெருமளவு நிதி தேவைப்படுமென அமெரிக்கா அறிவித்துள்ளது.

வேலைவாய்ப்பு வர்த்தகநடவடிக்கைகள் மற்றும் மக்களின் வாழ்க்கைத்தரம் என்பனவற்றை மிக விரைவில் அபிவிருத்தி செய்வதற்கு இந்நிதி தேவைப்படுவதாக வாஷிங்டனில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

உலக வங்கி விடுத்துள்ள அறிக்கையிலே அடுத்த நான்கு வருடகாலத்தில் 5600 கோடி டொலர் ஈராக்கில் செலவிடப்படுமென அறிவித்துள்ள போதிலும் அடுத்த வருட செலவிற்கென 600 கோடி டொலர்களை மாத்திரமே ஒதுக்கீடு செய்துள்ளது.

இதனிடையே ஈராக்கிற்கு உதவிவழங்கும் நாடுகளின் குழுக்கூட்டம் இம்மாதம் 23,24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. ஈராக்கின் யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஜேர்மனி, ரஷ்யா ஆகிய இரு நாடுகளும் இம் மாநாடு சம்பந்தமாக சந்தேகம் தெரிவித்துள்ளன. ஈராக்கில் அமெரிக்காவின் ஆதரவில் செயற்படும் போல் ட் பீலியஸ் செய்தியாளர்கள் மாநாட்டில் உரையாற்றுகையில் திட்டமிட்டபடி ஈராக்கிய புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# கொலம்பியாவில் கார்க்குண்டு வெடிப்பு இரு பொலிஸ்அதிகாரிகள் பலி

கொலம்பியாவில் கார்க் குண்டு வெடித்ததில் காவல் துறை அதிகாரிகள் 02பேர் உட்பட 06 பேர் உயிரிழந்துள்ளனர்.

போகாட்டா நகரிலுள்ள வீதி ஒன்றில் சந்தேகத்திற்கிடமான ஜீப் ஒன்று நிற்பதாகக் கிடைத்த தொலைபேசித் தகவலைத் தொடர்ந்து காவல்துறை அதிகாரிகள் இரண்டுபேர் விசாரணை நடத்த மோட்டார் சைக்கிளில் ஜீப் அருகே சென்ற வேளை ஜீப் வெடித்துச் சிதறியுள்ளது.நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதற்கு இடதுசாரி அமைப்பான புரட்சி ஆயுதப்படை என்ற தீவிரவாத அமைப்பே காரணமாக இருக்கலாமென காவல் துறையினர் சந்தேகிக்கின்றனர்.

# நவீன முறையில் அக்குபங்சர் சிகிச்சை

பழமையான மருத்துவ முறைகளிலொன்று அக்குபங்சர் முறையாகும். இன்று அக்குபங்சர் முறை இல்லாது வழக்கொழிந்துவிட்டதாகக் கூறப்பட்டாலும் நவீனமுறைப் படுத்தப்பட்டு இன்றும் மருத்துவ முறைகளில் பயன்படுத்தப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது என்பதை மறுக்கவில்லை இன்றைய விஞ்ஞானம்.

இந்த அக்குபங்சரின் ஆழ்ந்த நுட்பத்தையும்,பயனையும் மேற்குலகம் வெகுகாலம் உணராமல் இருந்தது.

நமது உடலெங்கும் ஒருவித ஆற்றல் வெள்ளம் பரவிப் பாய்கின்றது என்றும் அது சீராகப் பாயாதபோது நோய்கள் ஏற்படுவதாகவும் இன்று மருத்துவ உலகம் பேதமின்றி ஒத்துக்கொண்டுள்ளது.

நமது உடலில் ஆற்றல்கள் பாய்வதற்கென்றே பிரத்தியேகப் பாதை அமைப்புக்கள் இருக்கின்றன.

மனித உடலில் 14 ஆற்றல் மையங்கள் இருக்கின்றன. இதனை "மெபிரியன்" என்று மருத்துவர்கள் அழைக்கின்றார்கள்.

ஒவ்வொரு ஆற்றல் மையமும் உடலின் ஒவ்வொரு பாகத்துடன் தொடர்புடையதாக அமைந்துள்ளது.

ஆற்றலின் பாய்ச்சலைச் சீர்படுத்த இந்த மெபிரியன் எனும் ஆற்றல் மையங்களில்தான் மெல்லிய ஊசிகள் குத்தப்படுகின்றன. இதுவே அக்குபங்சர் மையங்களாக இருக்கின்றது.

ஒரு அக்குபங்சர் மையம் அது தொடர்பு கொண்டுள்ள உடலின் பாகத்திற்கு அருகில் இருக்க வேண்டும் எனும் கட்டாயம் இல்லை. உதாரணமாக,எமது ஆட்காட்டிவிரல் அழுத்தப்படுகையில் பெருங்குடல் தொடர்;கொள்ளப்படுகின்றது.

ஒவ்வொரு பாகத்திற்கும் ஆற்றல் போக்குவரத்துக்கான பிரத்தியேக நெடுஞ்சாலைகள் அமைந்துள்ளன.

உடலின் அக்குபங்சர் மையங்கள் எல்லோருக்கும் வித்தியாசமாக இருப்பதில்லை. ஒரே மாதிரியாகவே அமைந்து காணப்படுகின்றது. 365 பிரதான மையங்கள் மற்றும் 600 இரண்டாம் நிலை மையங்களாகவும் எமது உடலில் அவை செயற்படுகின்றன.

இரண்டு எலும்புகளுக்கும் தசைகளுக்குமிடையே இருக்கும் இடைவெளியில் இந்த மையங்களை அறிய முடியும்.

நோய்வாய்ப்பட்ட பாகங்களிற்குரிய அக்குபங்சர் மையங்களில் மெல்லிய ஊசிகள் குத்தப்படுகின்றன. இதன்மூலம் ஆற்றல் சரிசெய்யப்படுகின்றது. அதனால் நோய் குணமாகின்றது.

சிகிச்சை தொடங்குவதற்கு முன்னர் நோய் என்ன என்பது அறியப்படுகின்றது.

இதயத்துடிப்பு அறியப்படுகின்றது. நோயாளியின் நாக்கின் நி[illegible]மும், தோலின் நிறமாற்றமும் [illegible]யப்படுகின்றது.

உடற் பாகங்களின் செயற்பாட்டுப் பிரச்சினைகளுக்கு அக்குபங்சர் குணமளிக்கின்றது.

ஆனாலும் அறுவைச் சிகிச்சைக்கு மாற்றுமுறை இதில் இல்லை.

இரத்த அழுத்தத்திற்கு அக்குபங்சர் தரும் தீர்வு நிரந்தரமானதாக இருப்பதாகக் கூறப்படுகின்றது. விஞ்ஞான முறையில் இது முற்றாக நிரூபிக்கப்படவில்லை.

என்றாலும் அக்குபங்சர் மையங்களுக்கும் அசைவுகளுக்குரிய பாகங்களுக்குமிடையே ஆற்றல் பரிமாற்றம் பரிமாற்றப்படுவதை அண்மையில் ரேடியோ ஆக்ரா கமரா மூலம் படம் பிடித்துள்ளார்கள் விஞ்ஞானிகள்.

அறுவைச் சிகிச்சைகளில் மயக்கநிலையை ஏற்படுத்தவும் அக்குபங்சர் முறை பயன்படுத்தப்படுகின்றது.

பரபரப்பு ஏற்படுத்தக்கூடிய பாகங்களுக்குரிய அக்குபங்சர் முறை மையங்கள் மெல்லிய ஊசிகள் மூலம் மெல்லியதாகத் துளைக்கப்படுகின்றன.

இப்படியாக ஆற்றல் மையங்களில் ஊசிகள் துளைக்கப்படுகையில் மூளையில் 'கான்கபாலின்' எனும் இரசாயனத் திரவம் வெளியிடப்படுகின்றது இது வலியைக் குறைக்கும் தன்மையுடையதாக இருக்கின்றது.

பழமை வாய்ந்த இந்த அக்குபங்சர் முறை நவீனமாக இன்றும் பயன்படுத்தப்படுகின்றது. ஊசிகளுக்குப் பதிலாக, ஆற்றல் மையங்களில் லேசர் கதிர்கள் செலுத்தப்படுகின்றன.

பழைய அக்குபங்சர் போலல்லாமல் இம்முறை வேகமானதாய், சௌகரியமானதாய் முக்கியமாகப் பயன்பாடு உடையதாக இருக்கின்றது.

எண்ணிலடங்காத ஆராய்ச்சிகள் மூலம் அக்குபங்சரை முழுமையாகப் புரிந்துகொள்ள முயலுகின்றார்கள் இன்றைய விஞ்ஞான மருத்துவர்கள்.

எனினும் இந்த அக்குபங்சர் மருத்துவம் வெகு அற்புதமாக இன்றைய மருத்துவத்தில் பயன்படுத்தப் படுவதுடன்,இம்முறை அழிந்து போகாமலும்,பயன்பாடு உடையதுமாக இருப்பதுமே அக்குபங்சரின் மிகவும் சிறந்த சிறப்பியல்பாக விளங்கின்றது.

# காற்றில் ஓடும் கார்



காற்றில் ஓடும் கார் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் சிட்டிகேட் என்பதாகும். இதற்கு எரிபொருள் தேவையில்லை.

இந்தக் காரைப் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த டேவிட் என்பவர் ஏழாண்டு முயற்சியில் கண்டுபிடித்துள்ளார். 300 லீட்டர் காற்று அடைக்கப்பட்ட பார்கள் இவற்றில் உள்ளன. 800 செல்சியஸ் 25 குதிரை சக்தி பிஸ்டன் இஞ்சின் இயங்கி,400 செல்சியஸ் வெப்பத்தைத் தருவதால் கார் உடனே ஓடுகின்றது.

கார் தேவையான காற்றைச் சேமித்துக்கொள்வதால் மணிக்கு 110 கி.மீ வேகத்தில் செல்லக் கூடியது.

# கெமரோஹ் இன அழிப்பின் சான்று

கம்போடியாவில் "கொலை வயல்" (**Killing fields**) என்று கூறப்படும் பூனம் பென்னில் எடுக்கப்பட்ட மண்டை ஓடுகளே படத்தில் காணப்படுகின்றன.

சுமார் 8000 மண்டை ஓடுகள் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவர்கள் சூயங் ஏக் எனுமிடத்தில் நடந்த கெமரோஹ் இனக் கலவரத்தில் பலியானவர்கள்.

கெமரோஹ் இன அழிப்புக்குச் சான்று பகர்வது இந்த மண்டை ஓடுகள்தான்.

கம்போடியாவுக்கும் ஐ.நா.சபைக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்றின் கீழ் மேற்படி இன அழிப்புத் தொடர்பாக விசேட நீதிமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது தெரிந்ததே.



# உணவாகும் காளான்

காளான்இயற்கையாகக் கிடைக்கும அதிக சத்துள்ள ஓர் உணவு ஆகும். அதனால் காளானை எல்லோருமே சாப்பிட முடியும்.

காளானிலுள்ள புரதம் இலகுவாகச் சமிபாடு அடைந்துவிடக் கூடியது என்பதால் சிறுவர்களுக்குக் கூடக் காளான் சிறந்த உணவாகும்.

அத்துடன் உயர் இரத்த அழுத்தம் கொண்டவர்கள் உண்பதால், பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய கொலஸ்ரோலின் அளவைக் கூடக் குறைக்கின்றது.

காளானில் உப்புச்சத்துக் குறைவு. பொட்டாசியம் இருப்பதால் உடலில் தேங்கும் சோடியத்தின் பாதிப்புக்களை இது இல்லாது செய்கின்றது.

இரத்தத்திலுள்ள சீனியைக் குறைக்கும் தன்மை கொண்டதால் சர்க்கரை வியாதியுள்ளவர்களுக்கு மிகவும் நல்ல உணவாகும்.

நார்த்தன்மை அதிகம் கொண்டிருப்பதால் நோய் எதிர்ப்பு சக்தியை வளர்க்கும். காளானில் உயிர்ச்சத்து 'பி' (**B**) உள்ளது. இது இரத்த சோகைக்கு நல்லது.

போலிக் அசிட் கொண்டிருப்பதால் கர்ப்பிணிகளுக்கும், பாலூட்டும் தாய்மார் களுக்கும் இது சிறந்த உணவாக இருக்கின்றது.

காளான் வருடம் முழுவதும் வளரக் கூடிய ஓர் உணவு ஆகும்., சாதாரண நோய்களைக் குணமாக்கும் வல்லமை இதற்கு உள்ளது.

இதனால்தான் வெளிநாடுகளில் விரும்பி உண்ணப்படுகின்றது.

# சேற்றில் மூழ்கிய காரில் 35 மணி நேரம் பெண் மரணப்போர்

அயர்லாந்தில் லிசா என்ற பெண் ஓட்டிச்சென்ற கார் புதைசேற்று ஓடையில் மூழ்கி, 35 மணி நேரம் மரணப்போராட்டம் நடத்தியுள்ளார். புதைசேற்றில் சிக்கிய எந்த உயிரினமும் உயிர் தப்புவது கஷ்டம். சேற்றில் விழுந்த கார், முழுவதும் மூழ்கி, கார் பின்புற பம்பர் மட்டும் வெளியே தெரிந்தது. ஆனால் உள்ளே சிக்கி இருந்த லிசா, காரின் ஹோரனை விடாமல் ஒலித்தார். சகதிக்குள் இருந்து விசித்திர சத்தம் வந்ததை 35 மணி நேத்திற்குப் பின்னர் அந்த வழியாக வந்த டிரைவர் பார்த்தார். காரை கிரேன் மூலம் தூக்கினர். உள்ளே பார்த்தால் 35 மணி நேரம் சேற்றுக்குள் மூழ்கி இருந்தும் லிசா உயிரோடு இருந்தார். அதைப்பார்த்த அனைவரும் ஆச்சரியத்தில் திகைத்தனர்.(28)

# தெரிந்து கொள்ள

* பிளாஸ்ரிக் சேர்ஜரியின் தந்தை என்று மதிக்கப்படுபவர் இந்தியரான சிஸ்ருதா.

* நீளம் தாண்டுதலில் 23 ஆண்டுகளாக இருந்து வந்த பொப் பீமனின் சாதனையை 1991இல் தகர்த்தவர் மைக்போவெல்.

* தமக்குக்கிடைத்த இலக்கியத்துக்கான நோபல் பரிசை நிராகரித்த ரஷ்யர் போரிஸ்பாஸ்டர்நெக்.

* 1946இல் இடைக்கால இந்திய அரசியல் நிதி அமைச்சராக இருந்த முஸ்லிம்லீக் தலைவர் லியாகத் அலிகான்.

★ கனடாவின் தேசியக்கொடியில் இடம் பெற்றிருக்கும் மரத்தின் இலை மேப்பள்.

* ஹரிஹரர், புக்கர்,கம்பனர், முத்தப்பரப்பர் ஆகிய ஐந்து சகோதரர்களால் கி.பி.1346இல் ஸ்தாபிக்கப்பட்ட சாம்ராஜ்யம் விஜயநகரப் பேரரசு.

* முதல் உலகப் போரின் போது பயன்படுத்தப்பட்ட விஷவாயு- குளோரின்.

* இரவும் பகலும் சமஅளவு இருக்கும் நிலை ஈக்வினாக்ஸ் எனப்படுகிறது.(**EQUINOX**)

* அன்னி பெஸன்ட் அம்மையாரால் 1914 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் தொடங்கப்பட்ட நாளேட்டின் பெயர் நியூஇந்தியா.

# மலைப்பாம்பு

சிறிலங்காவில் காணப்படும் பாம்புகளில் பெரியது மலைப் பாம்பாகும். ஆங்கிலத்தில் பைத்தன் (**python**) எனவும் ரொக் ஸ்நேக் எனவும் அழைக்கப்படும். இவை விஷமற்ற பொய்டே குடும்பத்தைச் சேர்ந்தவையாகும். விலங்கியலாளர்கள் பைத்தன் மொலிவ்ரஸ் பிம்புரா என இதனை அழைக்கின்றனர்.



முக்கோணவடிவத்தில் அமைந்த தலையுடன் கூடிய இதன் கழுத்து கவர்ச்சியானது. வாற்பகுதி குறுகியது. பத்து முதல் பதினைந்து அடி வரை நீளமாக வளர்ச்சியடையக் கூடியது. கொழுத்த உடலைக் கொண்ட இதன் நிறம் மண்ணிறமாகும். மஞ்சள் நிறம் கலந்த சாம்பல் புள்ளிகளுடன் குட்டிகள் காணப்படும். உடலின் இருபக்கங்களும் மெல்லிய சிவப்பு நிறமாகக் காணப்படும்.

அநேகமானோர் மலைப்பாம்புகள் எனக் கருதி புடையன்களையும் பிடிக்க முயன்று உயிரிழந்துள்ளனர்.மலைப்பாம்பின் தலையில் நீண்ட கோடு காணப்பட புடையன் பாம்பின் தலையில் V வடிவான அடையாளம் காணப்படுகின்றது.

1521ல் வெளியான புராதன விஷவைத்திய நூலில் மலைப்பாம்பு பற்றியும் அவற்றின் உணவு பற்றியும் கூறப்பட்டுள்ளது.

இவ்வகைப் பாம்புகள் கடல் மட்டத்திலிருந்து மத்திய மலை நாடு வரையுள்ள காடுகளில் பரவலாகக் காணப்படுகின்றன. சிறிய பிராணிகளான எலிகள் முதல் பன்றி,முயல்,மான்,குரங்கு,நாய் முதலியவற்றை விழுங்கும் இவை மனிதர்களை[illegible]யும் விழுங்கிய சம்பவங்கள் [illegible]ள்ளன. மலைப்பாம்பு ஆரவாரமில்லாத ஜந்து எனினும் மின்னல் வேகத்தில் பாய்ந்து தனது உணவைப் பற்றிக் கொள்ளும். பின்னர் அகப்பட்ட உயிரினம் சாகும் வரை வாயில் கவ்விக் கொண்டிருக்கும்.

பெண்பாம்பு ஆயிரக்கணக்கான முட்டைகள் இட்டு சுமார் மூன்று மாதகாலங்களுக்கு அடைகாத்து குஞ்சு பொரிக்கும். இவ்வேளையில் அவை உணவின்றி இருக்கும்.

இவ்வகைப் பாம்பு இனங்கள் அழிக்கப்படுதல் சட்டப்படி குற்றமாகும் என நமது நாட்டின் வன விலங்கு பாதுகாப்புத் திணைக்களம் எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

# லேசர் சிகிச்சை

இருதயக் கோளாறு,இருதயச் சுருக்கம்,நிமோனியா,சளி,இரைப்பைப் புண்,பெருங்குடல் நோய் ஆகியவற்றைக் குணப்படுத்த ரஷ்யாவில் "கல்சியம் ஓர்ங்சனைட்" லேசர் ஒளிக்கற்றைகளைப் பயன்படுத்துகின்றனர்.

இந்த லேசர் ஒளிக்கற்றைகளைப் பயன்படுத்திப் பத்தாயிரம் நோயாளருக்கு மேல் இதுவரை சிகிச்சையளித்துள்ளனர்.

# 46 ஆண்டுகளின் பின்னர் வெளியான உண்மை

ரஷ்யா விண்வெளிக்கு அனுப்பிய நாய் இறந்த உண்மை 46 ஆண்டுக்குப் பின்னர் தெரியவந்துள்ளது. விண்வெளி ஆராய்ச்சியில் ரஷ்யா 1957ஆம் ஆண்டு ஒரு நாயை விண்வெளிக்கு அனுப்பியது. ஸ்புட்னிக்-2 செயற்கைக் கோளில் அனுப்பப்பட்ட அந்த நாயின் பெயர் லைக்கா. அது, செயற்கைக்கோளில் உயிருடன் இருந்ததாக ரஷ்ய விஞ்ஞானிகள் முன்பு கூறி வந்தனர். ஆனால் அந்த நாய் சில மணி நேரத்தில் இறந்துபோய்விட்டது என்ற உண்மை 46 ஆண்டுக்குப் பின்னர் இப்போது தெரிய வந்திருக்கிறது. ஒவ்வாமையே இதற்குக் காரணமாகும் என்று கூறப்படுகின்றது.

# இலங்கை அரசு
# வடக்கு-கிழக்கு மாகாணம்
# வடக்கு-கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
# கடன் இல :- 2880-சி.இ.(C.E)
# தேசியபோட்டிக் கூறுவிலை கோரல்
# நிர்மாண வேலைகள்

# கேள்வி அறிவித்தல்-ஐ.எவ்.பி(I.F.B)

**ஐ.எவ்.பி.இல: கிளி/நீர்ப்/02** **10 - 10 - 2002**

01. வடக்கு-கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகு செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி.(I.B.R.D) கடன் வசதி, ஐ.டி.ஏ. (I.D.A) நம்பிக்கையின் கீழான வசதி.

02. அரசாங்க அதிபர், கிளிநொச்சி, இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடம்இருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.

03. கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது கிளிநொச்சியில் மாற்றத்தக்கதான அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம எந்திரி மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி அவர்களிடமிருந்து 11.11.2003ஆம் திகதி பிற்பகல் 03.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்விஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சியில் இலவசமாக பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதம எந்திரி,
மாகாண கட்டடங்கள் திணைக்களம்,
பழையகமம், முரசுமோட்டை,
பரந்தன், கிளிநொச்சி.

05. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள், கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்குள் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 11.11.2003 பிற்பகல் 03.00 மணிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
கேள்விச்சபை,
மாவட்டச்செயலகம்,
கச்சேரி,
கிளிநொச்சி.

அதேதினம் பிற்பகல் 03.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும், கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில், காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில், அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

06. வேறு விபரங்களை கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்வி குறியீட்டு இல | வேலை விபரம் | கேள்விப் பிணை | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை நிறைவேற்ற வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| கிளி/நீர்ப் / உ.வி./3 | உதவி விவசாய பணிப்பாளர் அலுவலகம் மீள் நிர்மாணம், கிளிநொச்சி. | 120,000/= | 1000/= | 05 மாதங்கள் |
| கிளி /நீர்ப்/பிசெ/4 | ஓர் பதவிநிலை உத்தியோகத்தர் விடுதி மீள் நிர்மாணம், மாவட்ட செயலகம், கிளிநொச்சி. | 43,500/= | 750/= | 03 மாதங்கள் |
| கிளி/நீர்ப்/கதி/5 | பிரதம எந்திரி அலுவலகக் கட்டடம், கட்டடங்கள் திணைக்களம், மீள் நிர்மாணம், கிளிநொச்சி. | 51,400/= | 750/= | 03 மாதங்கள் |
| கிளி/நீர்ப்/பிசெ/6 | பிரதேச செயலகம் மீள் நிர்மாணம், பளை. | 249,500/= | 1000/= | 10 மாதங்கள் |
| கிளி/நீர்ப்/ சுவே/7 | சத்திர சிகிச்சைக்கூடமும், வாட்டிற்கு ஒடுங்கு பாதையும் மீள் நிர்மாணம், மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி. | 100,400/= | 1000/= | 05 மாதங்கள் |
| கிளி/நீர்ப்/சுவே/8 | 14 படுக்கைகள் கொண்ட பிரசவ வாட்டும், பிரசவ அறையும் மீள் நிர்மாணம், மத்திய மருந்தகம், உருத்திரபுரம். | 105,300/= | 1000/= | 05 மாதங்கள் |

07. கேள்விதாரர்கள் கேள்விதாரர்களுக்கான செயற் பிரமாணக் குறிப்புக்கள் 04 ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக் குறைந்த தகைமைகளாக கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது.
இந்தக் கேள்வி விளம்பரத்தில் உள்ள ஒன்றுக்குமேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும் போது கேள்வி தாரர் இவ் வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும் அனுபவமும் இருப்பது ஒரு தனி ஒப்பந்தத்திற்குத் தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

தி.இராசநாயகம்
அரசாங்க அதிபர்
கிளிநொச்சி.

(சி-8645)

# இலங்கை அரசு
# வடக்கு-கிழக்கு மாகாணம்
# வடக்கு-கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
## கடன் இல :- 2880-சி.இ.(C.E)
## தேசியபோட்டிக் கூறுவிலை கோரல்
## நிர்மாண வேலைகள்

# கேள்வி அறிவித்தல்-ஐ.எவ்.பி(I.F.B)

## ஐ.எவ்.பி.இல: கிளி/நீர்ப்/03

10 - 10 - 2003

08. வடக்கு-கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகு செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச சேர்ந்த தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி. (I.B.R.D) கடன் வசதி, ஐ.டி.ஏ. (I.D.A)நம்பிக்கையின் கீழான வசதி.

09. அரசாங்க அதிபர், கிளிநொச்சி, இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடம்இருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.

10. கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது கிளிநொச்சியில் மாற்றத்தக்கதான அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம எந்திரி மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி அவர்களிடமிருந்து 11.11.2003ஆம் திகதி பிற்பகல் 03.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்விஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

11. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சியில் இலவசமாக பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதம எந்திரி,
மாகாண கட்டடங்கள் திணைக்களம்,
பழையகமம், முரசுமோட்டை,
பரந்தன், கிளிநொச்சி.

12. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள், கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்குள் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 11.11.2003 பிற்பகல் 03.00 மணிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
கேள்விச்சபை ,
மாவட்டச்செயலகம்,
கச்சேரி,
கிளிநொச்சி.

அதேதினம் பிற்பகல் 03.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும், கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில், அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

13. மேலதிக விபரங்களை கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்வி குறியீட்டு இல. | வேலை விபரம் | கேள்விப் பிணை | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை நிறைவேற்ற வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| கிளி /நீர்ப்/கவே/9 | பழைய வைத்தியசாலையை சுற்றி மதில் மீள் நிர்மாணம், கிளிநொச்சி. | 34,700/= | 500/= | 02 Months |
| கிளி /நீர்ப்/கவே/10 | பழைய வைத்தியசாலைக்கு மின் பிறப்பாக்கியறை மீள் நிர்மாணம், கிளிநொச்சி. | 8,300/= | 250/= | 01 Month |
| கிளி/நீர்ப்/கவே/11 | பழைய வைத்தியசாலைக்கு சமயலறை மீள் நிர்மாணம், கிளிநொச்சி. | 8,300/= | 250/= | 01 Month |

14. கேள்விதாரர்கள் கேள்விதாரர்களுக்கான செயற் பிரமாணக் குறிப்புக்கள் 04 ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக் குறைந்த தகைமைகளாக கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது.
இந்தக் கேள்வி விளம்பரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும் போது கேள்விதாரர் இவ் வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும், அனுபவமும் இருப்பது ஒரு தனி ஒப்பந்தத்திற்குத் தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி.

(ஈ-8646)

# தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் 2003

## கிளிநொச்சியில்










## புதுக்குடியிருப்பில்









# ஒப்பந்தத்தைத் தூக்கி எறியின் நிரந்தரத்தீர்வைக் காண முடியாது

## -பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

**அரசாங்கத்திற்கும், புலிகளுக்குமிடையிலான சமாதான ஒப்பந்தத்தைத் தூக்கி எறிவதன் மூலம் வடகிழக்கு பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை காணமுடியாதென பிரதமர் ரணில் கூறியுள்ளார்.**

கதிர்காமத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைவிடப்பட்டு யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டுமென கூறுவது இலகுவான விடயம். ஆனால் யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டால்அப்பாவிப் பொதுமக்களே பாதிக்கப்படுவார்களென அவர் மேலும் கூறியுள்ளார்.

சீர் குலைந்துள்ள பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்தா முடிந்துள்ளதாகவும்,தற்போதை போர் நிறுத்தத்தை நிரந்தர சமாதானமாக மாற்றி பொருளாதார சமூக மேம்பாட்டிற்கு வழிவகுப்பதே அரசின் நோக்கமாகுமென அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்திக்காக ஆரம்பிக்கப்பட்ட இலங்கைக்கு புத்துயிர் ஊட்டுவோம்என்ற திட்டத்தை அடுத்த 09 வருடகாலத்தில் பூர்த்தி செய்ய அரசு திட்டமிட்டுள்ளது இதற்கு 1800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

## சந்திரிகா சிங்கப்பூர் விஜயம்

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று சிங்கப்பூருக்கான உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொள்கின்றார். சிங்கப்பூர் செல்லும் அவர் அந்நாட்டின் பிரதமர்,சனாதிபதி மற்றும் முன்னாள் பிரதமர் ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளார்.முன்னதாக, உலகப் பொருளாதார பேரவையின் கூட்டத்தில் கலந்து கொள்ளும் அவர் தெற்காசியாவின்தற்போதைய பொருளாதாரநிலை என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

## அரசின் வரவு-செலவுத்திட்டம் நவம்பர்-12 சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் 12ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருக்கின் இந்தத் தகவல் நேற்று நாடாளு மன்றத்தில் இடம் பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் அரசாங்கத் தரப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

வரவு செலவு திட்டத்தின் 2வது வாசிப்பு தொடர்ந்து ஏழு நாட்கள் நடைபெறும் அதேநேரம் அமைச்சர்களுடன் ஒதுக்கீட்டு விவாதம் 19 நாட்கள் இடம்பெறவிருக்கின்றது. இதேவேளை, ஈராக் தொடர்பில் பிரதமர் ஐக்கிய நாடுகள் சபையில் வெளியிட்ட கருத்து மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லீம்கள் தனித் தரப்பாக பங்கேற்க வேண்டும் எனக்கோரும் விவாதம் என்பன வற்றை எதிர்வரும் 21ஆம்,22ஆம், 23ஆம் திகதிகளில் நடைபெறுவ தையும் இன்றைய கட்சித்தலைவர்க ளின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (32)

## யாழ். மீள்குடியேற்றம் குறித்து ரணிலுடன் பேச கூட்டமைப்பு முடிவு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டின் வலிகாமம் வடக்குப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக பிரதமரைச் சந்தித்துப் பேசுவதென தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிறைவேற்றுக் குழு இந்த முடிவை எடுத்திருப்பதுடன் இந்த மீள் குடியேற்றத்தை வலியுறுத்தி குடாநாட்டில் அகிம்சைப் போராட்டங்களை நடத்துவதெனவும் தீர்மானித்துள்ளது.

கொழும்பிலுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணி அலுவலகத்தில் சுமார் மூன்று மணிநேரம் இந்தக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இம்மாதம் 16ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்திக்கும் போது பேசப்பட வேண்டிய விடயங்கள் பற்றி ஆராயப்பட்டது.

## ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

பாணந்துறைப் பகுதியில் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.நேற்று முன்தினம் வீடு ஒன்றின் அருகில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் பொலிஸாரால் அவை மீட்கப்பட்டுள்ளன. இதில் அதிசக்தி வாய்ந்த வெடிபொருட்களும் அடங்கியிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தில் பணியாற்றிய வீரர் ஒருவரே இந்த ஆயுதங்களையும் வெடி பொருட்களையும் தம்மிடம் கொடுத்ததாக ஆயுதம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார். (32)

## சிறுவர் மீது பாலியல் துஸ்பிரயோகம் 2 பிக்குகள் உட்பட 6பேர் கைது

### -கொழும்பு ஜெயவர்த்தனபுரத்தில் சம்பவம்

(கொழும்பு)

கொழும்பு-சிறி ஜெயவர்த்தனபுர கோட்டே பிரதேசத்தில் அமைந்துள்ள சிறுவர் புனர்வாழ்வு நிலையம் ஒன்றில் 11 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளான சம்பவம் தொடர்பாக கடந்த புதன் கிழமை இரு புத்தபிக்குகள் உட்பட ஆறு பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய சிறுவர் நன்நடத்தைப் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்து விசேட பொலிஸ் பிரிவினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.மேலும் நான்கு சந்தேக நபர் கள்பொலிசாரிடம் சரணடைந் துள்ளனர்.

## பசறை பி.சபை உறுப்பினர் மீது தாக்கு பயன்படுத்தப்பட்டது படையினரின் குண்டே

(கொழும்பு)

பசறைப் பிரதேச சபையின் பொ.ஐ.முன்னணி உறுப்பினர் சுனில் த.சில்வா கடந்த 6 ஆம் திகதி இரவு கைக்குண்டு வீச்சில் காயமடைந்துள்ளார்.

தமது அலுவலக கடமைகளை முடித்துக்கொண்டு வீடு வந்து அவசிய தேவையாக வீட்டின் பின்னால் சென்றவேளை தாக்கு தலுக்குள்ளானார்.

காயங்களுக்குள்ளாகிய நிலையில் அவர் பொலிசாருக்குத் தகவல் கொடுத்ததாகவும், பின்னர் மயங்கிய நிலையில் பசறை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அவரது மனைவி கூறினார்.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட குண்டு பாதுகாப்புப் படையினருக்குச் சொந்தமானது எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் விசாரணைகள் தொடர்கின்றன என சிறிலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## பெற்றோரை இழந்த மாணவருக்கு உதவி வழங்கும் திட்டம்!

### த.பு.கழகம் நடவ க்கை

(யாழ்ப்பாணம்)

பெற்றோர்களை இழந்த மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

யாழ். குடாநாட்டில் உள்ள சகல பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இத் திட்டத்தை பெற்றோர்களை இழந்து பெரும் கஸ்ரங்கள் மத்தியில் தம் கல்வியை தொடரும் தரம் 10ற்கு கீழ்ப்பட்ட மாணவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் இக்கழகம்

இவர்களை தெரிவு செய்வதற்குரிய விபரங்களை அவரவர் வாழும் பிரதேசசெயலர் பிரிவுகளூடாக மேற்கொண்டு வருகிறது.

யாழ். மாவட்டத்தில் வாழும் பெற்றார்களை இழந்த மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்கு உரிய காரணங்களையும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் பல புத்திஜீவிகளும் சுட்டிக்காட்டியும் அரசோ அல்லது வேறு உதவும் அமைப்புக்களோ போதிய கவனம் எடுக்காததால் தமிழ் சந்ததிகளின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.(33)

### -முஸ்லிம்களைத் தனித்தரப்பாக்கக்கோரி-

## 22ஆம் திகதி மறியல் நடத்த முஸ்லிம் பா.உ.கள் முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்தரப்பு தனித்தரப்பாக பங்கு கொள்ளவேண்டுமென கோரி மறியல்போராட்டங்களை நடத்தஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முஸ்லிம் தரப்பு எதிர்வரும் பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாக பங்குகொள்ள வேண்டுமென வலியுறுத்தி எதிர் வரும் 23ஆம் திகதி நாடாளுமன்றில் விவாதம் ஒன்றை நடத்த ஏற்கனவே கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த விவாத நாளுக்கு ஒருநாள் முன்பதாக இந்த மறியல் போராட்டத்தை நடத்த நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசியின் இல்லத்தில் கூடிய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிவெடுத்துள்ளனர்.

இதேவேளை வடக்கு கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் இந்திய உயர்ஸ்தானிகரை சந்தித்துள்ளனர். இதன் வடக்கு கிழக்கு இடைக் கால நிர்வாகத்தில் முஸ்லிம்களின் நிலைப்பாடு சமாதானப் பேச்சுவார்த்தையில்தனித்தரப்பாக பங்கு கொள்வது உட்பட்ட கோரிக்கைகள் இந்திய உயர்ஸ்தானிகரின்நிருபம் சென்னிடம்முன்வைக்கப்பட்டுள்ளன.இந்தக் கோரிக்கைகளை எஇந்திய அரசின் கவனத்திற்கு தாம் சமர்ப்பிப்பதாக நிருபம்சென் இதன்போது உறுதியளித்துள்ளார். அத்துடன் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந் சிங்கா இலங்கைக்கு வரும் போது. அவருடன் வடக்கு கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றியப் பிரதிநிதிகளை சந்திக்க வைக்க ஏற்பாடு செய்வதாகவும் நிருபம் சென் உறுதியளித்துள்ளார். (32)

## சமூக பொருளாதார வங்கி திறப்பு

(திருமலை)

சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி திருமலையில் மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் கடற்கரைச்சேனையில் இன்று திறந்து வைக்கப்படவுளது. (25)

## வாள் வெட்டில் ஒருவர் பலி

(மன்னார்)

மன்னார் இலந்தமோட்டையில் இனந்தெரியாதவர்கள் நடத்திய வாள்வெட்டில் குடும்பஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான மணியம் (வயது-47) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

மேற்படி கொலை தொடர்பான விசாரணைகளைப் பொலிசார் மேற்கொண்டுள்ளனர். (மி)

## திறப்பு விழா

(திருமலை)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட திரியாய் கட்டுக்குளம் கிராமத்தில் தமிழர் புனர்வாழ் வுக்கழகத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பத்து வீடுகள் திறப்பு விழா எதிர் வரும் 12 ஆம் திகதி நடை பெறவுள்ளது.

அன்றைய தினம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் குச்ச வெளிப் பிரதேசஅலுவலகத் திறப்புவிழாவும் பிற்பகல் நடை பெறவுள்ளது. (25)

## கட்ராக்ற் சிகிச்சை

வவுனியா பொது வைத்திய சாலையில் கட்ராக்ற் சிகிச்சை 25.10.2003ஆம் திகதி நடை பெறவுள்ளதால் கட்ராக்ற் சிகிச்சை பெறவிரும்பும் நோயாளர்கள் 22.10.2003ஆம் திகதி புதுக்குடியிருப்பில் அமைந்திருக்கும் மாவட்ட வைத்தியசாலை விடுதியில் தங்குமாறு மாவட்ட வைத்திய அதிகாரி அவர்கள் தெரிவித்துள் ளார். (26)

## யாழ். ஐந்து சந்திப் பகுதியில் படையினர் திடீர் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டுச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் போது வீதியால் சென்ற இளம் வயதுடைய சிலரை முகாமுக்கு அழைத்துச் சென்று உடற்பரிசோதனை செய்ததுடன் விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது. (33)

## ஓமந்தையில் ராணுவத்தால் கைதான இரு இளைஞர்கள் விடுதலை

(செட்டிகுளம்)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் கடந்த மாதம் கைது செய்யப்பட்ட இரண்டு நபர்களும் வவுனியா நீதிமன்றில் வைத்து பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வன்னிப்பகுதியில் இருந்து குண்டு வெடிக்கவைக்கப்படும் கருவிகள் பொருத்தப்பட்ட 4 செல்லிட தொலைபேசி, போலி அடையாள அட்டை என்பன வைத்திருந்ததாக வன்னியில் இருந்து வவுனியா நோக்கி வந்த இரண்டு இளைஞர்கள் கடந்த மாதம் 14ஆம் திகதி வவுனியா ஓமந்தைப் பகுதியில்வைத்து கைது செய்யப்பட்டு கொழும்பு கொண்டுசெல்லப்பட்டனர். இவர்கள் இருவரும் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் என்று தெரிவித்த போதும் விசாரணையின் மூலம் இவர்கள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் இல்லை என்று தெரியவந்ததாக சிறிலங்கா புலனாய்வு தரப்பில் ஆஜரான அதிகாரி எற்கனவே தெரிவித்திருந்தார். நேற்று முன்தினம் மேற்படி இளைஞர்கள் மற்றும் செட்டிகுளம் பகுதியில் கைது செய்யப்பட்ட மற்றும் ஒரு நபரும் ஆஜர் படுத்தப்பட்டபோது 10ஆயிரம் ரூபா காசு, பிணையும், 50ஆயிரம் ஆள் பிணையும். மாதத்தில் இரண்டு ஞாயிற்றுக்கிழமை வவுனியா பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும் என்று நீதிபதி ந.இளம்செழியன் உத்தரவு இட்டார் சந்தேக நபர்கள் தரப்பில் அண்டன் புனிதநாயகம் ஆஜராகினார்.



**சிந்தனைக்கு**

வீரசுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்.

தமிழீழத் தேசியத்தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 11-10-2003

## வெளியில் ஒரு மையம்!

இன்று இலங்கைக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு அரசியற் தலைவர்கள், இராஜதந்திரிகள் கொழும்புடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. வடக்கிற்கும் ஒருஎட்டு எட்டி விட்டுச் செல்லவே விரும்புகின்றனர். இதில் ஒரு தரப்பினர் யாழ்ப்பாணத்திற்கும், ஒரு தரப்பினர் கிளிநொச்சி, யாழ்ப்பாணமென இரு இடங்களுக்கும் விஜயங்களை மேற்கொள்கின்றனர்.

இத்தகையதொரு நிலையானது, இன்று இலங்கையில் கொழும்பிற்கும் வெளியில் ஒரு அதிகாரமையம் உள்ளது என்பதையும், கொழும்பின் உணர்வுகளுக்கு மாறாக இலங்கைத் தீவின் ஒரு பகுதி மக்களின் உணர்வுகள் உண்டு என்பதையும் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளத் தொடங்கியுள்ளது என்பதன் வெளிப்பாடே இதுவாகும்.

இதேவேளைசிலர் யாழ். குடாநாட்டிற்குள்- குறிப்பாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தமது விஜயங்களை முடித்துக் கொள்வார்கள். இவர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் அதிருப்தி கொண்டவர்களாக உள்ளனர். இவர்கள் இலங்கையின் அரசியல் யதார்த்தத்தினை ஏற்றுக் கொள்பவர்களாக இல்லை.இலங்கையின் அரசியல் யதார்த்தத்தில் தமது செல்வாக்கின் ஊடு மாற்றத்தை விளைவிக்கலாம் என்ற நோக்கினை அணுகு முறையில் கொண்டவர்களாக உள்ளனர். இவர்கள் ஒரு வகையில் தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாதவர்களாக அன்றிப் புரிந்து கொண்டும் தமது நலனை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயற்படுபவராகவும் உள்ளனர்.

இதேவேளை, வடக்கிற்கு வருபவர்களில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் அன்றி கிளிநொச்சிக்கு மட்டும் விஜயம் செய்பவர்கள் ஓரளவேனும் அரசியல் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டவர்களாக அன்றி புரிந்து கொள்ள முற்படுபவர்களாக உள்ளதோடு, யதார்த்தத்திற்கு ஏற்ப இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றைக்கான விழைபவர்களாகவும் அதற்கு உதவுகின்றவர்களாகவும் உள்ளனர். இந்தவகையில் விடுதலைப்புலிகள் அமைப்பினை அங்கீகரிப்பவர்களாக- விடுதலைப்புலிகள் இன்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்று காணமுடியாது என்பதை நன்கு உணர்ந்தவர்களாகவும் உள்ளனர்.

இந்தவகையில் அமையும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், தூதுவர்களின் வடக்கு விஜயமானது சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து பொதும் உவப்பிற்குரியதொன்றாக இருப்பதில்லைஆயினும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கான விஜயங்கள் அரசாங்கத்திற்கு இடையூறு இல்லாதது மட்டுமல்ல, ஒரு வகையில் அனுகூலமானவையும் ஆகும். ஏனெனில், இத்தகைய விஜயங்களை மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், இராஜதந்திரிகளினால் அவர்களின் நாடுகளிடம் இருந்து பொருளாதார, இராணுவ உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படலாம்.

ஆனால் கிளிநொச்சிக்கு வெளிநாட்டு இராஜதந்திரிகள், பிரதிநிதிகள் செல்வதென்பது அரசாங்கத்தைப் பொறுத்து உவப்பானதாக இருப்பதில்லை.வெளிநாட்டுப் பிரதிநிதிகள், இராஜதந்திரிகள் கிளிநொச்சிக்கு அடிக்கடி சென்று வருவதானது, விடுதலைப்புலிகளுக்குக் கிடைக்கும் அங்கீகாரமாகவே கருதப்படுகிறது.

இந்தநிலையில், ஐ.நா.பொதுச் செயலாளர் கொபி அனானின் விஜயம் சர்ச்சைக்குரியதொன்றாகி தற்பொழுது ரத்துச் செய்யப்பட்டுள்ளது. அதாவது ஐ.நா.செயலாளர் இலங்கைக்கு விஜயம் செய்யும் காலப்பகுதியில் வன்னிக்கும் விஜயம் மேற்கொள்ளுதல் வேண்டும் என்ற ரீதியில் எழுந்த கோரிக்கையானது ஐ.நா.செயலாளர் இலங்கைக்கான விஜயத்தை ரத்துச் செய்யும் அளவில் கொண்டுவந்துள்ளது.

திரு. கொபி அனான் வன்னிக்கு விஜயம் செய்வாரேயானால், அது விடுதலைப்புலிகளை ஐ.நா.செயலாளர் அங்கீகரிப்பதாக மட்டுமல்ல, இலங்கைத் தீவில் இரண்டு நாடுகள் உண்டு என்பதை அங்கீகரிப்பதாகவும் ஆகிவிடும் என்பதே ஐ.நா.செயலாளரின் வன்னி விஜயத்திற்கு எதிராக முன்வைக்கப்பப்பட்ட வாதமாகும். இதனை அரசாங்கமே முன்னெடுத்ததினால் ஐ.நா.செயலாளருக்கு தர்மசங்கடமானதொரு நிலை உருவாகியது என்றே கூறலாம். இந்நிலையில், ஐ.நா.செயலாளரின் இலங்கை விஜயம் ரத்துச் செய்யப்பட்ட தெனலாம்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகள், இராஜதந்திரிகள் வன்னிக்கு வரலாம் விடலாம், சிறிலங்கா அரசாங்கமும் வெளிநாட்டு அரச பிரதிநிதிகளின் அன்றி அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் வன்னி விஜயத்திற்கு முட்டுக்கட்டைகளைப் போடலாம். இதனால் சில நன்மை பயக்கத்தக்க விஜயங்கள் கூட ரத்தாகலாம். ஆனால் எதுவாகிலும்சரி வன்னிக்கான விஜயத்தினை மேற கொள்ளாத எவரும்- விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை நேரடியாக அறிந்து கொள்ளாத எவரும்/ இலங்கையின் யதார்த் தத்தைப் புரிந்து கொள்ளுதல் என்பது சாத்தியமாக மாட்டாது.

# தமிழருக்கு சுயநிர்ணய உரிமை வழங்கினால் இந்நாட்டில் சமாதானச் சூழ்நிலை தொடரும்

### பிரி.பிரதித் தூதுவரிடம் யாழ்.ஆயர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்த நாட்டில் தமிழர்கள் இரண்டாந்தரப்புப் பிரஜைகள் என்று இல்லாது சமமான அரசியல் மற்றும் ஆட்சி அதிகாரத்துடனான சுயநிர்ணய உரிமை அவர்களுக்கு வழங்கப்படும் போதுதான் இச்சமாதான சூழ்நிலை தொடரும் என யாழ். ஆயர் தோமஸ்சௌந்தர நாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பிரித்தானியாவின் சிறிலங்காவுக்கான பிரதித்தூதுவர் பீற்றர்சன் கியுஸ் மற்றும் பிரித்தானியாவின் றோயல் இராணுவ பயிற்சிக் கல்லூரியின் பிரதம இராணுவ ஆய்வாளர் ஜெனரல் கிறிஸ்தோபர் ஆகியோர் அடங்கிய குழு நேற்றுமுன்தினம் மாலை யாழ்.ஆயர் இல்லத்தில் ஆயரைச் சந்தித்து நடாத்திய மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது சமாதான சூழ் நிலை தொடருமா எனவும் அது குறித்த பொது மக்களின் நிலைப் பாடு என்ன எனவும் இச் சமாதான முன்னெடுப்பு முன்னோக்கி நகராது இருப்பதற்கான காரணங்கள் தொடர்பாக இக்குழுவின் வினாவினைத் தொடர்ந்து அவர் தெரிவிக்கும் போது,

தற்போது தமிழர் பிரதேசம் எங்கும் அமைதி நிலை நிலவினாலும் இந்த அமைதி ஸ்திரமடைந்து சமாதானம் நோக்கி நகர்வதற்கு இராணுவ பாதுகாப்பு நடவடிக்கைகள் பெரும் இடையூறாக இருந்து கொண்டிருக்கின்றது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் அரச படைத்தரப்பு நடந்துகொள்ளுமானால் மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவர்.

எனவே மக்கள் சம அந்தஸ்து உடையவர்களாக மதிக்கப்பட்டு அவர்களுடைய அரசியல் சுயநிர்ணய உரிமை, சுதந்திரம் வழங்கப்படுகின்ற போதே இந்தச் சமாதான சூழ்நிலை தொடரும் எனவும்அவர்குறிப்பிட்டார். (33)

# 30 ஆயிரம் சட்ட விரோத ஆயுதங்கள் இலங்கையில் பாவனையிலுள்ளன

### - உள்துறை அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

இலங்கையில் தற்சமயம் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சட்ட விரோத ஆயுதங்கள் பாவனையில் இருப்பதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபை, **Oxfarm** அரச சார்பற்ற நிறுவனம் என்பனவற்றின் உதவியுடன் ஐக்கிய நாடுகள் சபையின் சிறிய ஆயுதங்களைக் கட்டுப்படுத்தும் அமைப்பு இன்று கொழும்பில் ஒழுங்கு செய்திருந்த நிகழ்வில் இந்தத் தகவலை உள்துறை அமைச்சின் செயலர் எம்.என்.ஜீனைட் வெளியிட்டார். நாட்டில் தற்சமயம் 35 ஆயிரம் தப்பியோடிய இராணுவ வீரர்கள், தலைமறைவு வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் பாதாள குழுக்களாகச் செயற்பட்டு வருகின்றனர். இவர்களை பொது வாழ்க்கைக்கு கொண்டுவரும் முகமாக அரசாங்கம் பொதுமன்னிப்பை பிரகடனஞ் செய்துள்ளது. அண்மையில் சட்ட விரோத ஆயுதங்களைக் களையும்வகையில்பொது வேலைத் திட்டம் ஒன்று அரசாங்கத்தினரால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்சமயம் கணக்கிடப்பட்டிருக்கும் 30 ஆயிரம் சட்ட விரோத ஆயுதங்களில் வெறுமனே 6 ஆயுதங்கள் மாத் திரமே அரசாங்கத்திடம் ஒப்படைக் கப்பட்டன. அதில் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவர் சட்ட விரோதமாக 65 ஆயிரம் ரூபாவுக்கு கொள்ளவனவு செய்த ஆயுதமும் அடங்கும் எனவும் அவர் குறிப் பிட்டார். இந்த நிகழ்வில் இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளின் ஊடகவியலாளர்கள் தமது நாடுகளின் சட்டவிரோத ஆயுதங்களைப்பற்றித் த்கவல்களை வழங் கினர். உலக நாடுகளில் வருடம் ஒன்றுக்கு சட்டவிரோத ஆயுதங்களினால் சுமார் 5 இலட்சம் பேர் வரை பலியானதாகவும் அந்த நிகழ்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (32)

# கூட்டணி அமைக்க ஜே.வி.பி.க்கு அமைச்சுப் பதவி வழங்குவதில் தவறில்லை

### அநுரா பண்டாரநாயக்க கூறுகின்றார்

(கொழும்பு)

கூட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக மக்கள் விடுதலை முன்னணிக்கு அவர்கள் கேட்கும் அமைச்சுப் பதவியை வழங்குவதில் எவ்வித தவறுமில்லை என வெகுசன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் களுத்துறையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், ஏற்கனவே சிறிலங்கா சுதந் திரக்கட்சியும், பொதுசன ஐக்கிய முன்னணியும், இடதுசாரிகளுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கியுள்ளன. அதன் மூலம் சிறந்த ஆட்சியும் ஏற்பட்டது. இந்த நிலை யில் மீண்டும் பொதுசன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணிக்கு அமைச்சுப் பத விகளை வழங்கி மீண்டும் ஆட்சி யைக் கைப்பற்ற வேண்டும் எனவும் அநுரா பண்டார நாயக்க குறிப்பிட்டுள்ளார். (32)

# பொலிஸ்மா அதிபரை பதவி நீக்கக் கோரி சிஹல உறுமய போராடத் தயார்

### -கட்சிஅமைப்பாளர்அறிக்கை

(கொழும்பு)

சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபர்ஆனந்தராஜாவை பதவி விலகுமாறு சிஹல உறுமய கோரிக்கைவிடுத்துள்ளது.அந்தக் கட்சி அமைப்பாளர்விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்தக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவதோடுதனதுஅதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி வருகிறார் என்று குற்றம்சாட்டியுள்ள சிஹல உறுமய இதற்காக போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அந்த அறிக்கை கூறியுள்ளது.


பொலிஸ்மா அதிபரின் பதவிக் காலம் மேலும் நீடிக்கப்படவிருக்கும் இவ் வேளையில் அவர்மீது அவதூறுக்குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக சிறிலங்காவின் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்..

போதைவஸ்த்து கடத்தல் காரர் ஒருவரின்பிள்ளையின் பிறந்ததின கொண்டாட்டத்தில்பொலிஸ்மா அதிபர் கலந்து கொண்டதாக சிங்களப் பத்திரிகைஒன்று செய்தி வெளியிட்டிருந்ததுதெரிந்ததே.

# ஷோன் பொலக்கிற்கு அபராதம் விதிப்பு

நடுவரின் தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக தென்னாபிரிக்காவின் ஷோன் பொலக்கிற்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு வீரரான பவுச்சருக்கு எதிராக கூறப்பட்ட புகாருக்கு ஆதாரம் இல்லாததால் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.




பொலக்கிற்கு அந்த ஒரு நாள் போட்டிக்கான முழுச்சம்பளத்தையும் அபராதமாக செலுத்துமாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

# தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரருக்கு பிரி. ஐந்து வருட விசா வழுங்கியது

சிம்பாவ்வே கிரிக்கெட்அணியின் முன்னாள் வீராரன ஹென்றி ஒலஸ்காவுக்கு பிரிட்டிஸ் அரசாங்கம் ஐந்து வருட கால விசா வழங்கியுள்ளது.கடந்த உலகக்கிண்ண கிரிக்கெட்போட்டிகளின் போது சிம்பாவ்வே வீரர்களாக ஹென்றிஒலஸ்காவும் அன்டிபிளவரும் கையில் கறுப்புப் பட்டி அணிந்து விளையாடினர்.சிம்பாவ்வேயில் ஜனநாயகம் செத்துவிட்டதுஎன ஒலஸ்காவும் அன்டிபிளவரும் தெரிவித்திருந்தனர்.இந்த நடவடிக்கைகாரணமாக அவர்கள் சிம்பாவ்வே அரசாங்கத்தினால தண்டிக்கப்படுவர் என தெரிவிக்கப்பட்டது. சிம்பாவ்வே உளவுத்துறையால் தேடப்படுகிறார்என்ற செய்திகள் வெளியானதையடுத்துஒலஸ்கா போட்டிகள் முடிவடையும் முன்னரே தலைமறைவானார். தற்போது அவர் இங்கிலாந்தில் தங்கியுள்ளார். இந்த நிலையில் அவருக்கு பிரிட்டிஸ்அரசாங்கம் ஐந்து வருட கால விசாவழங்கியுள்ளது.

சிம்பாவ்வேயில் ஆட்சிமாற்றம் ஏற்படாவிட்டால் தான் நாடு திரும்பப்போவதில்லை என அவர் கூறியுள்ளார்.

# ஜே.வி.பி.யுடன் இணைந்து புதிய ஆட்சி அதன் பின் புலிகளுடன் பேசுவோம்!

## முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர

என்றாவது ஒருநாள் ஜே.வி.பி. யினரையும் இணைத்துக் கொண்டு நாங்கள் அமைக்கும் புதிய அரசாங்கத்தின் கீழ் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்போம் என மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

"அநாகரிக கலாச்சாரத்தை தோற்கடிக்கும் கூட்டணி" என்ற தலைப்பில் பாணந்துறையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றிய சமரவீர மேலும் கூறியிருப்பதாவது; கௌரவமான யாவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நாடு பிரிவடையாத சமாதானத் தீர்வொன்றைக் காண நாம் புலிகளுடன் பேசுவோம் என்றார்.

தற்போது விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள தீர்வு யோசனை பற்றி நாம் அறிந்த வகையில் இந்நாட்டின் தேசியக்கொடி இரு பகுதியாலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் நிதி, தேசியகீதம் என்பன பற்றி பேசித் தீர்மானிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார். எனினும் இடைக்கால சபை தொடர்பாக பேச முடியாது. இப்படியான விடயங்களில் அரசு புலிகளை பலப்படுத்தி விட்டது. நாம் இராணுவத்தில் இருக்கும்போது ஆறாயிரமாக இருந்த புலி உறுப்பினர்கள் இப்போது 25 ஆயிரமாக அதிகரித்துவிட்டது. அரச படைகளை விட புலிகள் பலமுள்ளவர்களாக இருக்கின்றனர். தேவையாயின் 2 மணித்தியாலத்தில் புலிகள் திருகோணமலையைக் கைப்பற்ற முடியும். இன்னும் இரண்டு வாரங்களில் புலிகள் சமர்ப்பிக்கவுள்ள பிரேரணைகளுக்கு ஏற்ற பதில் அளிக்கப்படாவிட்டால் அவர்கள் கொழும்பையும், திருகோணமலையையும், பலாலி விமானப் படைத்தளத்தையும் அழித்துவிடுவார்களானால் நாம் என்ன செய்வது?

தேசிய இனம் என்ற வகையில் நாம் நாட்டைக் காட்டிக் கொடுக்கலாமா? சமாதானத்திற்காக நாட்டைத் தாரைவார்க்க முடியுமா? இடைக்கால நிர்வாகம் பற்றி முன்பு நாமும் பேசினோம். அதற்கிணங்க புலிகள் இந்நாட்டின் இறைமையைக் கருதி எமது பொலிஸ், இராணுவம் என்பவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த அரசின் இடைக்கால நிர்வாகம் என்பது நாட்டைப் பிரிப்பதாகும்.

இது சுதந்திரக்கட்சியினதோ சந்திரிகாவினதோ தனிப்பட்ட பிரச்சினையல்ல. ஆகவே நாம் அனைவரும் ஜே.வி.பி.-சு.கட்சியின் கூட்டணியின் கீழ் ஒன்று திரள வேண்டும்.

எமது கொள்கைகளில் வேறுபாடுகள் இருக்கின்றமை உண்மையே ஒரே கொள்கை எனில் கூட்டணி தேவையில்லை. இவ்வாறு மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

# இ.நி. கட்டமைப்பிற்குள் நின்றுகொண்டு சமாதான முயற்சிகளை சாதகமாக்கலாம்

## அமைச்சர் பேராசிரியர் பீரிஸ்

இடைக்கால நிர்வாகம் என்கின்ற ஒரு கட்டமைப்புக்குள் இருந்து சமாதான முன்னெடுப்புக்களை சாதகமான நிலைக்கு திருப்ப முடியும் என சிறிலங்காவின் அரசியல் யாப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

குருநாகலில் இடம்பெற்ற கட்சிக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த கருத்தினை வெளியிட்டார்.

சனாதிபதியும் முன்னர் இத்தகைய இடைக்கால நிர்வாகசபைத் திட்டத்திற்கு ஆதரவானவராகவே இருந்தார். அவரது ஆட்சிக்காலத்தில் இரண்டாயிரமாம் ஆண்டு ஆகஸ்ட் மூன்றாம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச அரசியல் அமைப்பில் 15 ஆவது சரத்தில் உள்ளடக்கப்பட்ட ஒரு விடயமாக அது அமைந்துள்ளது.

இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமானத் தீர்வை எட்டுவதற்கு முன்னர் இடைக்கால நிர்வாகசபை வழங்கப்படுவது இன்றியமையாத ஒரு விடயமாகும். இந்த விவகாரத்தோடு சம்பந்தப்பட்ட மற்றைய தரப்பினருக்கு நம்பிக்கையையும், விசுவாசத்தையும் ஏற்படுத்துவதற்கு இது அவசியமானது.

இலங்கையில் மட்டுமன்றி அயர்லாந்து, தென்னாபிரிக்கா றுவாண்டா, பங்களாதேஷ், போன்ற நாடுகளிலும் இத்தகைய இடைக்கால நிர்வாக சபையொன்று பிரச்சினைக்கு இறுதித் தீர்வு வழங்கப்படுவதற்கு முன்னதாக அமைக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

# கிளி.யில் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பித்தோர் 15ஆம் திகதி வருக

## -உதவி ஆணையாளர் கந்தசாமி

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத் தினரால் நடமாடும்சேவை மூலம் உந்துருளி (மோட்டார் சைக்கிள்) சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் கிளி.அரச செயலகத்தில் உள்ள மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தில் வைத்து மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

15ஆம் திகதியன்று மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம் பெற விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துப் பரீட்சை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து அன்று மாலையும் 16ஆம் திகதியும் செயல்முறை ஓட்டுநர் பரீட்சை இடம்பெறவுள்ளது. மேற்படி சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கென விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் 15ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கிளி. அரச செயலகத்திற்கு சமுகமளிக்கும் வண்ணம் கிளி.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து உதவி ஆணையாளர் ஆ.கந்தசாமி தெரிவித்துள்ளார். அத்துடன் ஓட்டுநர் பரீட்சைக்கு எடுத்துவரப்படும் மோட்டார் சைக்கிள்களுக்கு 2003ஆம் ஆண்டு வரிஅட்டை, காப்புறுதிப் பத்திரம் மற்றும் விண்ணப்பதாரியின் பெயரில் மோட்டார் சைக்கிள் பதிவு இருத்தல் வேண்டுமெனவும், இல்லாத பட்சத்தில் மோட்டார் பயிற்சியாளர் பாதுகாப்பு காப்புறுதி அன்றையதினம் செய்துகொடுக்கப்படுமென தெரிவித்துள்ளார். விண்ணப்பதாரிகளுக்கு தனித்தனிக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (சோ)

## - வடக்கு-கிழக்கு மாகாணத்தில் -

# 2002 ஆம் ஆண்டிற்கான பரிசு பெறும் நூல்கள் அறிவிப்பு!

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு 2002 ஆம் ஆண்டு வெளியான நூல்களில் பரிசு பெறுவதற்குறிய நூல்களை தெரிவு செய்துள்ளது.

அக்டோபர் 17,18,19 ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறஇருக்கும் மாகாண தமிழ் இலக்கிய விழாவில் நூல்களின் படைப்பாளிகளுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளது. கவிதை, இலக்கியம், சிறுகதை இலக்கியம், நாவல் இலக்கியம், நாடக இலக்கியம், ஆய்விலக்கியம், பல்துறை இலக்கியம், உயர்கல்வி இலக்கியம், சிறுவர் இலக்கியம் ஆகிய தலைப்புக்களில் பரிசு பெறுவதற்குரிய நூல்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. கவிதை இலக்கியம் மூன்று பரிசுகள் க. சச்சிதானந்தம் பருவப் பாலியல் படும்பாடு (காவியம்) அ.ஜேசுராசா பனிமழை (மொழி பெயர்ப்பு நூல்) செ.மகேஸ் மனிதத்தைத் தேடி (ஆக்கப் பிரிவில்) சிறுகதை இலக்கியம் ஆ.ரெத்தின வேலோன் 'நிலாக்காலம்' நாவல் இலக்கியம் தமிழ்க்கவி இனிவானம் வெளிச்சிடும், நாடக இலக்கியத்திற்கு அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை 'எங்கள் நாடு' ஆய்வு இலக்கியம் நா.சுப்பிரமணியம் 'நாவலர், வாழ்வும் வாக்கும்' பல்துறை இலக்கியம் இரண்டு பரிசுகள் ஒன்று திருமதி மீரா மங்களேஸ்வரம் 'நிருத்தியம்' எஸ். பேராசிரியன் 'கருகும் பசுமை' உயர் கல்வி இலக்கியம் டாக்டர் சி.சுரேஸ் சண்முகராசா 'சித்தமருத் துவமும் மூலைத்துவமும்' சிறுவர் இலக்கியம் அனுவை நாகராஜன் 'சிறுவர் சிந்தனைக் கதைகள்'. (25)

### பேரணிகள்..

பாடசாலையில் காலை 9 மணிக்கு எழுச்சிநாள் நிகழ்வு ஆரம்பமாகி நடைபெற்றது.

உடையார்கட்டு பகுதியில் மூங்கிலாறு மட்டு. அம்பாறை மாவட்ட மாவீரர் மண்டபத்தில் மாலை 5.45 மணிக்கு எழுச்சி நிகழ்வு ஆரம்பமாகி நடைபெற்றது.

புதுக்குடியிருப்பில் புதுக்குடியிருப்புச்சந்தியில் இருந்து மங்கல வாத்திய இசை முழங்க வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமாகிய பேரணி மாலதி விளையாட்டரங்கைச் சென்றடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

வவுனியா மாவட்டத்தில் எழுச்சி நாள் நிகழ்வுகள் மாலை ஐந்து மணியளவில் வவுனியா மன்னார் வீதியில் ஆரம்பமான பேரணி வவுனியா சிறுவர் பூங்காவை சென்றடைந்தது.

மன்னார் வீதியில் ஐந்து பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய இசைமுழங்க 2ம் லெப். மாலதியின் திருவுருவப் படத்தினை பெண்கள் தாங்கிவர பேரணி வைரவர் புளியங்குளம் சிறுவர் மைதானத்தினை நோக்கி நகர்ந்தது. இதில் பல நூற்றுக்கணக்கான பெண்கள் எழுச்சி பூர்வமாக கலந்துகொண்டனர். பேரணி நடைபெற்ற வீதியில் இருபதுக்கும் மேற்பட்ட இராணுவ பொலிஸ் புலனாய்வு பிரிவினர் சிவில் உடையில் நிகழ்வினை பார்த்துக் கொண்டிருந்தனர்.

இதேவேளை பூங்காவை பேரணி சென்றடைந்ததும் அங்கு சுலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

நெடுங்கேணியில் நெடுங்கேணி ம.வி.யில் பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றது.மன்னார் மாவட்டத்தில் மன்னார் பேருந்து நிலையத்திலிருந்து பிற்பகல் 2.30 மணிக்கு எழுச்சிப் பேரணியுடன் ஆரம்பமாகி எழுச்சிநாள் நிகழ்வு மன்னார் நகரசபை மண்டபத்தைப் பேரணி சென்றடைந்ததும் அங்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் பிற்பகல் 2 மணிக்கு மூன்று திசைகளிலிருந்து ஆயிரக்கணக்கான பெண்கள் பேரணியாக நிறைவு நிகழ்வு இடம்பெற்ற சேனையூர் மத்திய மகாவித்தியாலயத்தைச் சென்றடைந்ததும் அங்கு நிகழ்வுகள் இடம்பெற்றன.

காலை நிகழ்வுகள் திருமலை சென்.மேரிஸ் பெண்கள் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எழுச்சி நிகழ்வுகள் மகிழடித் தீவில் சிறப்புற நடைபெற்றன.

யாழ்.மாவட்டத்தில் கோப்பாயில் 2ம் லெப்.மாலதி நினைவாலயத்திலிருந்து மாலை ஐந்து மணிக்கு பாண்ட் வாத்திய அணிநடையுடன் எழுச்சிப் பேரணி ஆரம்பமாகி கோப்பாய் ஞானபண்டிதர் கலாசார மண்டபத்தைச் சென்றடைந்தது. தொடர்ந்து அங்கு அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன.

இதேவேளை, யாழ்.எல்லங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் எழுச்சிநாள் நிகழ்வுகள் சிறப்புற நடைபெற்றன.

நெடுந்தீவில், நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் பிரதான நிகழ்வுகள் நடைபெற்றன.

துணுக்காய்ப் பிரதேசத்தில் மல்லாவி மாவீரர் மண்டபத்தில் நடைபெற்ற பிரதான நிகழ்வில் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

முள்ளியவளைப் பிரதேசத்தில் முள்ளியவளை அரசினர் வைத்தியசாலைக்கு அண்மையாக அமைந்துள்ள 2ம் லெப்.மாலதியின் திருவுருவ நினைவுத்தூபி முன்றலில் காலை 9.00 மணிக்கு முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் செல்வி சசி அக்கா தலைமையில் எழுச்சி நிகழ்வு ஆரம்பமாகி நடைபெற்றது.

(பி.05,21,33,24,சோ,லோ)

### பிரதமர்...

அடக்கி ஆளும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எனவே இதற்கு எதிராகப் போராட எதிர்க் கட்சிகள் இணைந்து போராட விரும்புவதாகத் தெரிவித்தார். (32)

### 10ஆ.பேரை...

நிர்மூலமாக் கிவிடும் எனக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை அவர் நிராகரித்தார். ஜே.வி.பி.க்கு 05 அமைச்சர் பதவிகளை வழங்குவதே நியாயமானதென அநுரா மேலும் கூறியுள்ளார்.

### சர்வதேச...

சம்பந்தமாக அதைப் பூர்த்தி செய்வதற்கான பணியிலே ஈடுபட்டோம். அதாவது ஐந்து நாட்களாக மேற்கொண்ட பணி பூர்த்தியாகியுள்ளது. அத்தோடு நாங்கள் அயர்லாந்திலே பல சமாதான ஒப்பந்தங்களோடு சம்பந்தப்பட்ட நிபுணர்களோடும் நாங்கள் சந்தித்திருக்கிறோம். வட அயர்லாந்தைச் சேர்ந்தவர்கள் தென்னாபிரிக்கா போன்ற பல சமாதான முன்னெடுப்புக்களோடு சம்பந்தப்பட்ட பல நிபுணர்களோடு நாங்கள் பல கலந்துரையாடல்களை மேற்கொண்டிருக்கிறோம்.

இடைக்கால நிர்வாக வரைவுக்கு மேலும் வலுவூட்டக்கூடிய பல கருத்துக்களை நாங்கள் உள்வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

இடைக்கால நிர்வாக வரைவு சம்பந்தமான அதிகாரத்தை அதனுடைய கட்டமைப்பு சம்பந்தமான விடயங்களை நாங்கள் எங்களுடைய சட்ட வல்லுனர்களோடும் சர்வதேச சட்ட நிபுணர்களோடும் நாங்கள் கூடி ஆராய்ந்து பல முடிவுகளை எடுத்திருக்கின்றோம். அந்த முடிவுகளை நாங்கள் எங்களுடைய தலைவரிடம் சமர்ப்பித்த பின்பு இறுதியாக நோர்வேயூடாக அரசிற்கு கையளிக்க இருக்கிறோம்.

வட அயர்லாந்து நிபுணர்கள் எங்களோடு பல கருத்துக்களை பரிமாறியிருக்கிறார்கள். ஆனால் அயர்லாந்து அரசாங்கம் இதில் நேரடியாக பங்குபற்றவில்லை. அவர்கள் சட்ட வல்லுனர்களை ஒன்று கூட்டுவதற்கும் எங்களுடைய சட்ட நிபுணர்களுடன் இணைந்து நாங்கள் எங்களுடைய பணியை மேற்கொள்வதற்கான இடவசதிகள் ஏனைய வசதிகளையும் தந்துதவியிருக்கின்றார்கள்.

சமாதான உடன்படிக்கைகளில் சம்பந்தப்பட்ட சட்ட நிபுணர்களுடன் நாங்கள் கலந்துரையாடுவதற்கு அவர்களுடைய ஒத்துழைப்புக்களும் எங்களுக்கு கிடைத்திருக்கிறது.

இந்தச் சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருக்கிறது. ஏனெனில் சர்வதேச அளவில் இனப்பிணக்குகள் போர்கள் நடந்த நேரங்களிலே இடைக்கால ஏற்பாடாக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகள் சம்பந்தமாக பல கருத்துக்களை நாங்கள் உள்வாங்கக் கூடியதாக இருந்தது. எங்களுடைய சூழ்நிலை வித்தியாசமாக இருந்தாலும் சர்வதேச அளவில் அவர்கள் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட பொழுது எங்களுடைய அந்த வரைபை உருவாக்குவதற்கும் எங்களுக்கு மிக மிக பயனுள்ளதாக இருந்தது என்று கூறினார்.

### தமிழர்...

எனவே இரு சமூகங்களும் உண்மை நிலையைப் புரிந்து பொறுமை காக்கும்படியும் தமிழ், முஸ்லிம் உறவுகளை பேணிவளர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

### ஊரடங்கு...

இடையில் நேற்று முன்தினம் மோதல்கள் ஏற்பட்டதை அடுத்து அங்கு ஊரடங்குச் சட்டம் அமுலானது. இந்த நிலையில் நேற்று மோதல்கள் எதையும் இடம் பெறாத போதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை அங்கு பொலிஸ் ஊரடங் குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

### தமிழ்ச்..

னர்.

இவ்விரு நாடுகளுக்குமான பயணத்தை நிறைவு செய்யும் புலிகள் அதன் பின்னர் தாயகம் திரும்புவர்.

### பலகல்ல...

றுள்ளார்.

அடுத்த ஆண்டு ஓய்வுக்காலத்தை எட்டுவதற்கு முன்னர் பதவியுயர்வை எதிர்பார்த்த உயர் இராணுவ அதிகாரிகள் பலர் சனாதிபதியின் அறிவிப்பால் அந்த வாய்ப்புக்களை இழந்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, சிறிலங்காவின் தேர்தல் ஆணையாளராக தயானந்த திசாநாயக்க மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான பணிப்புரையை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வழங்கியுள்ளார்.

இருதய நோயாளியான தான் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்ல அனுமதிக்குமாறு கோரி நீதிமன்றத்தில் அவர் மனுச் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கோப்பாய்...

படைப்பணியின் தளபதி தமிழ்ச்செல்வி அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து நிகழ்வில் போராளிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர். எச் செம்மனன் அங்கு சிறப்புரையாற்றினார்.

இதே வேளை யாழ்குடா நாட்டின் முக்கிய நகர்ப்பகுதிகள் எங்கும் அலங்காரப்பந்தல்கள் அமைக்கப்பட்டு மாலதியின் உருவப்படம் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்தது.

அத்துடன் மாலதியின் உருவப்படம் தாங்கிய ஊர்தியொன்று முற்றாக்கள் அஞ்சலிக்காக குடா நாட்டின் பல பகுதிகளுக்கும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மாலை நிகழ்வுகள் கோப்பாய் கந்தசாமி கோவில் முன்றலில் இடம் பெற்றன.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.